உ

சிவமயம்.

OFFICE OF THE REGISTRAR
6-NOV 1926
MADRAS



சதுரகிரிமலை அடிவாரத்தின் தென்புறமிருக்கும்

மங்கைமாநகரமென்னும்

# வத்திராயிருப்பில்

வாழ்ந்திலங்கும்

# முத்தாலை அம்மன்

## சரித்திரம்.

இது

வத்திராயிருப்பிலிருக்கும் உபாத்தியாயர் சாத்தாபிள்ளை
அவர்கள்குமாரர் சடையாண்டிபிள்ளை என்ற
சுப்பிரமணிய பிள்ளை அவர்களால்
இயற்றப்பெற்று

ஷை யூர் பிடில்
**V. K. கருப்பணத்தேவர் அவர்களால்**
பார்வையிடப்பெற்று

வத்திராயிருப்பு கிராம மகாஜனங்கள் உதவியால்

மதுரை
மீனலோசனி அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.
1926.

உ

சிவமயம்.

3680
922.945



சதுரகிரிமலை அடிவாரத்தின் தென்புறமிருக்கும்
மங்கைமாநகரமென்னும்

## வத்திராயிருப்பில்

வாழ்ந்திலங்கும்

# முத்தாலை அம்மன்
# சரித்திரம்.

இது
வத்திராயிருப்பிலிருக்கும் உபாத்தியாயர் சாத்தாபிள்ளை
அவர்கள்குமாரர் சடையாண்டிபிள்ளை என்ற
சுப்பிரமணிய பிள்ளை அவர்களால்
இயற்றப்பெற்று
ஷை யூர் பிடில்
**V. K.** கருப்பணத்தேவர் அவர்களால்
பார்வையிடப்பெற்று
வத்திராயிருப்பு கிராம மகாஜனங்கள் உதவியால்

மதுரை
மீனலோசனி அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.
1926.

வத்திராயிருப்பு மூலவைத்திய மகா-ள-ள-ஸ்ரீ
இராமச்சந்திரக் கவிராயரவர்கள் கூறிய

# சாற்றுக்கவி.

---

மங்களஞ்சேர் சலசமின்னார் மகிழ்ந்திலங்கும் வளநகர்வத்
ராயிருப்பில்
தங்கியிருந் தகிலமெல்லாந் தழைத்தோங்கக் கருணைமழை
தருநற் செல்வி
துங்கமதி வதனமுத்தா லம்மையின்மேற் றுதிபலவாய்த்
தொகுத்த மைத்தான்
கங்கைகுலத் துதித்தகல்விக் களஞ்சியமாஞ் சடையப்பக்
கவிவல் லோனே.

---

220446

உ

சிவமயம்.

# முத்தாலம்மன் சாத்திரம்.

OFFICE OF ... 6-NOV 1926 ... MADRAS

## விநாயகர் துதி.

சத்தரிஷி யோர்முதலாய்த் தவசியற்றுஞ் சதுரகிரிச்
சார்பின் றென்பால்
முத்தமுழும் வேதாந்தம் சித்தாந்தம் அனுதினமும்
முழங்கு நாடு
வத்திரா யிருப்பென்னு மாநகரில் எந்நாளும்
வாழ்ந்தி லங்கும்
அத்திமுக வித்தகனும் அம்பலவி நாயகன்றன்
அடிகாப் பாமே. (1)

அத்திமா முகனே போற்றி யரனருள் சேயே போற்றி
பத்தியாய்ப் பணிவோர் தம்மைப் பாதுகாப் பவனே போற்றி
முத்தியா னடைவ தற்கு மூலகா ரணனே போற்றி
சத்திமேற் சிந்து பாடத் தண்ணருள் செய்வாய் போற்றி. (2)

## சரஸ்வதி துதி.

அலைகடலிற் றுயின்றெழுந்த அரிக்குரிய மகனெனவந்
தவத ரித்து
உலகமெல்லாஞ் சிருஷ்டிக்கும் அயன்றனக்குத் தேவியென
வுதித்தாய் மேலும்
புலவரெல்லா முனதினிய கிருபையதால் முத்திபெற்றுப்
புகழுற் றூர்கள்
கலைமகளே யென்னுவில் வந்துமுத்தா லம்மனுயர்
கவிசொல் வாயே. (3)

## கடவுள் துதி.

ஆதியே யானே அமலநா யகனே
அருந்தவ மிழைத்தவ ரகத்துட்
சோதியாய் நின்று துலங்குமெம் பானே
சுத்தசை தன்யநிர்க் குணனே
பாதிமா மதியைச் சடையினிற் றரித்த
பரமனே யுனதடி பணிந்தேன்
ஓதிடச் சிந்து முத்தாலே மீது
உவந்தெனக் கருள்புரி வாயே. (4)

## விஷ்ணு துதி.

அரவணை துயின்ற அச்சுதா னந்தா
அன்பர்க ளிடர்தவிர்த் தாண்டாய்
விரைசெறி குழலாள் அகலிகை சாப
விமோசனஞ் செய்தருள் புரிந்தாய்
சுரர்முனி வரர்க ளனுதின முனையே
துதித்திட ஞானவீ டளித்தாய்
பரிவுட னடியேன் முத்தாலே மீது
பாடிட வரமருள் வாயே. (5)

## பழநியாண்டவர் துதி.

சராசரப் பொருள்க ளனைத்தினு நிறைந்து
தன்மயந் தெளிதர விளங்கும்
பராபர னீன்ற பழநியாண் டவனே
பவக்கட லொழித்திடும் பரனே
விரைசெறி குழலா ரிருவரின் பாகா
விமரிசை யுடனுன தடியைச்
சிரமதில் வகித்து முத்தாலே சிந்து
செப்புதற் கருள்புரி வாயே. (6)

## முத்தாலம்மன் துதி.

ஐயர வணியும் பரமனு ரிடத்திற் பரிவுட னடம்புரி பவளே
வையகத் தடியார் கொடும்பவந் தவிர்த்து வரம்பல தருந்திரு வுருவே
ஐகிலி சவ்வோ டவ்வுமுவ் வுமதாய் ஐம்பத்தோ ரக்கர மதுவாய்
உய்வகை யருளி முத்தாலே யென்னை யுளமுவந் தாள்வதுன் கடனே.

(பாண்டியனீன்றமீனாக்ஷி என்ற மெட்டு.)

பல்லவி.

ஆச்சியே என்முத்தா லாச்சி—உன்னருள்
அளித்திடுங் காட்சி (ஆச்சி)

அனுபல்லவி.

மாக்ஷிமை பெற்றகா மாக்ஷி— மங்கைமா
நகரராசாக்ஷி (ஆச்சி)

தோகையரா.

அன்னைநீ தந்தைநீ அன்புடைய சுற்றநீ ஆதர வளிக்கு முமைநீ
அண்டநீ பிண்டநீ யாவுநீ யென்றுகா னனுகிவந் துனேய டைந்தேன்
தேவியே அம்பிகா நீயே வந்தென்னை யாண்டருள்வாயே (ஆச்சி)

சந்நிதி முன்பு நின்று தௌத்தியஞ் செய்த பேர்க்கு
நின்னரு ளளித்துக் காத்து நிரந்தர வாழ் வளிப்பாய்
இன்னமு மேழை மீது இரங்கிடா திருந்தனை இதுவுனக் கழகாகுமோ
அன்னையே யுன்பதந் தானே சடையப்பன் நம்பினே னே.(ஆச்சி)

---

பல்லவி.

கோமளைமுத்தாலையுன்றன் குஞ்சிதபதந்தருவாய் (கோ)

அனுபல்லவி.

மாமதி முகமிலங்க வந்துதவி தான்புரிவாய் (கோ)

சரணம்.

அண்டமெல்லாம் போற்றிசெய்யும் அம்பிகைதயாபரியே
அன்னையுன்பதமலாது ஆதரவுவேறுளதோ (கோ)

பிள்ளைபடுந்துயரமதைப் பெற்றவள்நீயே தவிர்ப்பாய்
பித்தர்பங்கில்வளர்மாதா நித்தமும்வந்தருள்புரிவாய் (கோ)

பத்தன்சடையப்பனுன்மேல் பாடிடுந்துதிக்கிரங்கிச்
சித்தம்வைத்துக்காத்திடுவாய் சின்மயசொரூபிநீயே (கோ)

---

## அம்மன் வரலாறு.

### சிந்து.

அத்திமுக வித்தகனே—உயர்
அம்பலவி நாயகனே
வித்தைநல்ல களஞ்சியமே—வடி
வேலவற்கு மூத்தோனே
சத்தியுமை பங்கிலுறை—சிவ
சங்கரனூர் பாலகனே—என்
சித்தமதில் வீற்றிருந்து—கவி
செப்பிடநீ வாக்கருள்வாய்
பந்தவினை தானறுத்து—உயர்
பத்தர்களைக் காப்பவனே
வந்துமுத்தா லம்மனுயர்—புகழ்
வகுத்துரைக்க வேண்டுமையா
ஆதிசிவன் பாலகனே—உனை
அடிபணிந்தேன் பாருமையா
சோதிச் சுடர்வடிவேல்—நாளுந்
துலங்குங் காத்தவனே
வள்ளிமண வாளனேநீ—யென்
வாக்கினிற் குடியிருந்து
புள்ளிமயி லேறிவந்து—நிதம்
புண்ணியனே பாருமையா
கோமளைமுத் தாலையின்மேல்—பாடக்
குற்றமது வாராமல்
சாமளன் மருமகனே—திருச்
சண்முகனே கிருபைசெய்வாய்
தாமரைவெண் மலரதனில்—உறை
தாயே சரஸ்வதியே

நேமமுட னுன்பதத்தைத்—தாயே
நிதந்தொழுதேன் பாலகனுன்

தேவிமுத்தா லம்மையுயர்—நல்ல
திருக்கதையைப் பாடுதற்கு

நாவினிற் குடியிருந்து—எனக்கு
நல்லவரந் தாருமம்மா

சதுரகிரி தன்னிலுறை—மகாலிங்க
சாமியுனை யேபணிந்தேன்

மதுரமொழி நல்லுமையாள்—முத்தாலே
மகிமைதனைப் பாடுதற்கு

வாக்கதனில் வீற்றிருந்து—கதை
வகுத்துரைக்க வேண்டுமென்று

நோக்கியுன்றன் பாதமதைப்—பாலன்
நூறுதரந் தெண்டனிட்டேன்

வடக்குவாசல் காத்திருக்கும்—செல்வியுன்றன்
மலரடியை நான்பணிந்தேன்

திடத்துடனே வந்தெனக்கு—உன்
திருவாக்குத் தந்தருள்வாய்

கற்றவர்கள் முன்னிலையில்—நான்
கல்வியறி வணுவுமிலேன்

சித்திலங்கும் முத்தாலே—யம்மன்
திருக்கதையைப் பாடுவதில்

குற்றமிக விருந்திடினும்—நீக்கிக்
குழந்தையெனைக் காப்பீரே

பெற்றதாய் தந்தையரும்—தம்
பிள்ளைகள்செய் குற்றமதைச்

சற்றுமனத் தெண்ணாத
தன்மையெனக் காத்தருள்வீர்

காப்பீ ரெனவணங்கி—யிரு
கரங்குவித்து நான்பணிந்தேன்

இனிமேல்வி ளம்புகின்ற—ஜெக
தீஸ்வரியாள் நற்கதையைக்

கனிவாகக் கேட்டருளும்—இக்
காசினியி லுள்ளோரே

சோதிமய மாய்விளங்கி—என்றும்
துலங்குங்கை லாயமதில்

ஆதிபா மேஸ்வரனும்—அங்கு
அம்மையுமை பார்வதியும்

பூலோகந் தன்னிலொரு—திருப்
புதுமைவிளை யாடவென்று

சாலோக பதவிதருஞ்—சிவ
சங்கரனும் பார்வதியும்
அந்தமுடன் தானினைக்க—வந்து
அவதரித்துப் பூவுலகில்

வந்துதித்த நற்கதையை—இங்கு
வழுத்துகிறேன் நானடியேன்.

வேறு

ஆரியர் குலமதனில்—சிவபெருமான்
அருளுருவே வடிவமதாய்ப்
பாரினிலே வந்துதித்து—ஜமதக்னி
பகவனெனப் பேருபெற்று
உமையவள்தன் னருளமைந்த—ரேணுகையை
யுகந்துமணம் புரிந்தனரே
இமையகிரிச் சார்படுத்த—நைமிசவனத்
திருந்துதவஞ் செய்தனரே
பரனுடைய கிருபையதால்—ரேணுகைநான்கு
பாலர்களைப் பெற்றனளே.

வேறு.

விரைவுடனே தந்தையரும்—மைந்தர்க்குவில்
வித்தைமுதற் கற்றுவைத்தார்

இந்தவித மாகவேதான்—குழந்தைகளையங்
கினிமையுடன் வளர்த்துவந்தார்

தந்தையுரை தட்டாமல்—சேயர்களும்
தானடந்து வந்தார்கள்.

வேறு.

கற்பினி லுயர்ந்த ரேணுகையுங்
காலை யுதயந் தனிலெழுந்து

தற்பரன் பூசைக் குரியசா மான்களைத்
தான்றுலக்கியங்கு வைத்துவிட்டு

ஏகியே கங்கை நதியருகில்—நின்று
ஏந்திழை யாளுமே ஸ்நானஞ்செய்து

நாவினுல் பர்த்தாவைத் தான்துதித்து—அங்கு
நங்கை யவள்சலந் தான்திரட்டி

செப்புக் குடம்போல் தான்திரள—அதைச்
சேயிழை தூக்கி யிடையில்வைத்து

அப்பணிந்தோன் பாதந்தன்னைத்—தியானித்து
ஆரணங் கேகி நடந்தனளே

வந்துஆ சிரமந் தனிற்புகுந்து—அங்கு
மங்கை யவள்ஜலங் கீழிறக்கி

பந்த மறுத்திடும் பர்த்தாவின்—பாதத்தில்
பாங்குடன் வீழ்ந்து நமஸ்கரித்து

சென்று சமையலுக் கானபதார்த்—தங்கள்
சிக்கிர மாகவே தான்சேர்த்து

நின்று விரைவினில் சமையல்வகை—யெல்லாம்
நிமிஷத்தி லாக முடித்துவைத்து

பர்த்தா வரவை யெதிர்பார்த்து—அந்தப்
பைந்தொடி யுங்கை தொழுதுநிற்பாள்.

நொண்டிச்சிந்து.

நிஷ்டைகள் தான்முடித்து—ஜமதக்னி
நிமல னருளால்வந்த தனயர்களும்

அஷ்டலட் சுமிநிறைந்த—ரேணுகையும்
அழகாய்ச் சமைத்திருந்த அன்னமதை

குழந்தைக ளுடனிருந்து—அருந்தியபின்
குருபரன் யோகமதி லிருந்திடவே

ஏகினர் தவச்சாலை—சென்றதின்மேல்
இனிதுடன் ரேணுகையும் புசித்தபின்பு

பர்த்தாவின் றன்வரவை—யெதிர்பார்த்துப்
பணிந்து கரங்குவித்துத் தொழுதிருப்பாள்

இப்படித் தினந்தோறும்—பணிவிடையில்
ஏதுங் குறைவில்லாமல் நடந்துவந்தாள்

ஆண்டவ னருளாலே—ரேணுகைக்கு
அமைத்த வினையினால் வரும்விதத்தை

விவரமாய் விளம்புகிறேன்—வடி
வேலவ னருளினால் மேதினியில்

வேறு.

மாதுஸ்மையாள் ரேணுகையும்—பர்த்தாவின்
மலரடியைத் தெண்டனிட்டு

ஏதுங்குறைவில்லாமல்—நாதனிடம்
இனிமையுடன் வாழ்ந்திருந்தாள்

எப்போதும் வழக்கம்போல—பகவான்பூசைக்
கேகினளே ஜலந்திரட்ட

செப்பரிய கங்கைதனை—நோக்கிச்
சேயிழையுந் தானடந்தாள்

வந்துமந்தக் கங்கைதனில்—உயர்
வண்புடைவை யைத்தோய்த்து

கந்தமலர்க் குழலண்ணங்காம்—அந்தக்
காரிகையும் ஸ்நானஞ்செய்து

பொற்கொடியாம் மாதவளும்—இடையில்
பூந்துகிலாடையுடுத்தி
கற்புடையாள் ரேணுகையும்—நின்று
கணவனடி தான்தொழுது
தேன்கமழு மலர்க்கரத்தால்—ஜலந்
திரட்டுமந்தச் சமயமதில்
மண்புவியா ளரசர்களில்—சத்ரிய
மாபினிலே யுதித்தவனும்
ஆயிரஞ் சிரமமைந்த—கார்த்தவீரிய
அர்ச்சுனனும் ரதமேறி
நேயமுடனாகாய—வீதிதனில்
நிருபனுமே வந்தானே
ககனவழி வருகையிலே—ஜலமதனில்
கண்டனளே அவன்சாயல்
சகமதனி லிவ்விதமாம்—சொரூபம்
தான்கண்ட தில்லையென்று
நினைத்தாளே உத்தமியாள்—அந்த
நிருபனுய ரழகதனை
மனத்தினில் நினைத்ததனால்—கற்பு
மாதவளும் தானழிந்து
கனகரத்ன வளையணிந்த—கையால்
காரிகையும் ஜலந்திரட்ட
மனம்வேறு பட்டதனால்—ஜலம்
வழக்கம்போல் திரளவில்லை
வாசமலர்க் குழலணங்கு—மனம்
வாடிநின்று தான்புலம்பி
எனதுடைய நாதனிடஞ்—சென்று
என்னசொல்வே னெனக்கலங்கி
கதிரியங்கே அழுதாளே—யிரு
கட்புலனில் நீர்சொரிய

வேறு.

நெஞ்சிலிருகரத் தால்புடைத்து—அங்கு
நேரிழையாளுங் கதறிநின்று

பஞ்சப் பிராணிபோல்—ரேணுகாதேவியும்
பதறிமனமது தான்கலங்கி

வண்டுலவுங்குழல் மாதரசி—தானும்
வந்துஆசிர்மந் தனிற்புகுந்து

ஒன்று முரையாமல்—நாதனிடத்தினில்
உள்ளங்கலங்கித் தொழுதுநின்றாள்

நின்றவள் தன்னிலே—அன்னவரறிந்து
நீதிதவறி நடந்தாளென்று

இன்றிவள்செய்த குற்றமதற்குச்—சிட்சை
யென்செய்திடலா மெனநினைத்து

அன்னவள்வதனம் பாராமல்—ஜம
தக்கினிபகவான் கோபமதாய்

கன்னல்மொழிமாதே—யப்புறஞ்செல்லென
கடிந்துமுனிவர் தானுரைத்தார்

இப்படியாக விருக்குந்—தருணத்தி
லேந்திழையாள்பெற்ற புதல்வர்களில்

அப்போதிளைய குமாரர்கள்—மூவரும்
அருகிலிருப்பவரைப் பார்த்து

விற்பனமுள்ள குழந்தைகளா—நீங்கள்
விரைவுடன்ஆயுதங் கைப்பிடித்து

கற்புத்தவறினதாலும் தாய்—சிரத்தைக்
கண்டித்துவாருங்களென வுரைத்தார்

தந்தையுரைத்தமொழி யதனைக்—கேட்டு
தனயர்கள்மூவருந் தானழுது

உன்றனுரைப்படி தாய்தனைக்—கொன்றிட
உள்ளங்கருகு தெனவுரைத்தார்

என்றனுரையது தட்டினதால்—நீங்க
ளெல்லோரும் வேடருருவங்கொண்டு
சந்ததம்பக்ஷி பறவைகளைக்—கொன்று
தான்புசிப்பீரெனச் சாபமிட்டார்
பாலர்கள்சாபம்பெற் றேகிடவும்—பின்பு
பரசுராமன்வெளி சென்றவனும்
சீலமுடன்வந்து தந்தையின்—பாதத்தில்
சேவித்துவீழ்ந்து எழுந்துநின்றான்
நின்றவன்முகத்தைத் தானோக்கி—அரை
நிமிஷத்திலுன்றன் தாய்சிரத்தை
மன்றறியக்கொய்து வாவெனக்—கோபமாய்
வன்கண்மையாக வுரைத்தனரே.

(கழுத்தில் விழுந்தமாலை என்ற வர்ணமெட்டு)

தந்தையுரைத்தமொழி மைந்தனுங்கேட்டுமே
தாய்தனையழைத்தவ னேகையினில்
முந்தைவினைமாறுமே யிந்தவிதியுனக்கு
வந்ததேயென்செய்வேன் அம்மணியே.

மைந்தனேயுனக்கினி மனக்கவலைவேண்டாம்
மாதவஞ்செய்துபெற்ற பாலகனே
சிந்தைவருந்தவேண்டாம் தந்தைமொழிப்படியே
செய்திடுவாய்சிரங் கொய்திடுவாய்.

அருந்தவஞ்செய்துபெற்ற அன்னைதன்சிரமதை
அரிந்திடவோநானும் அவதரித்தேன்
குருபரன்செயலிதற் கினியென்னசெய்வேனென்
றுளமதுசோர்ந்துமே யழுகலுற்றான்.

நறுமலர்மதிபுனை யரன்திருவருட்படி
நடப்பதற்கினிநா மென்னசெய்வோம்
வருவிதிதனையாரும் விலக்கவல்லாருண்டோ
வருத்தமுறாதேயென் கண்மணியே.

என்றுதாயுரைத்திட நின்றுபரசுராமன்
எதிரினில்மாதாவைத் தானிருத்தி
வென்றிரல்வீரனும் வாள்கரத்தேந்தியே
வீசினனிருதுண்ட மாகவேதான்.

கும்மி.

தந்தை யுரைத்த மொழிப்படியே பெற்ற
தாயின் சிரமதைத் தான் துணித்து
வந்து பிதாவி னடிமலர்த் தாளினில்
வணங்கி நமஸ்கரித்தே வீழ்ந்தான்.

அந்தோவுடன் பிதா விருகரத் தாலணைத்
தன்பாய் மகனை யருகிருத்தி
என்ற னுயர்பாலா கண்மணியே வுனக்
கென்ன வரமது வேண்டுமடா.

உன்றன் மனப்படி நான்தரு வேனென்று
உள்ள மகிழ்ந்துமே தானுரைக்க
சிந்தை தெளிந்துமே மைந்தனு மேவீழ்ந்து
சேவித் திருகரங் கூப்பி நின்று.

என்றன் தம்பிமார் மூவர்செய்த குற்றம்
எந்தலை மன்னித் தருள்புரிவீர்
அன்னவர் கட்கிட்ட சாபத்தை நீக்கி
யழைத்திட வேண்டு மெனப்பணிந்தான்.

இப்படியாய் மைந்தன் கேட்டிடவும் முனி
யிட்ட சாபமதைத் தான்விலக்கிச்
செப்ப முடனே யழைத்திட மூவரும்
சேர்ந்துவந் தார்பிதா தன்னருகில்

வேறு.

இன்னமொரு வரமெனக்கு—இப்போ
தீந்திடவே வேண்டுமென்றான்
நன்னயமாய் நான்தருவேன்—பாலா
நவின்றிடுவா யெனவுரைத்தார்

என்னுடைய ஐயாவே—யென்னை
யீன்றெடுத்த தாய்தனையே

கொன்றுவிட்டா னென்றுசொல்லி—யிந்தக்
குவலயத்தோ ரேசிடுவார்

பெற்றதாயைக் கழுத்தறுத்த—பொல்லாப்
பெரும்பாவி யென்பார்கள்

மாதாவைச் சிரமறுத்த—இவன்
மாபாவி யென்பார்கள்

ஆனதினா லென்பிதாவே—தாயை
அழைத்துவரக் கிருபைசெய்வீர்

ஞானவுரு வாகவந்த—என்
நாதனேநீ ரருள்புரிவீர்

இந்தவர மேதவிர—வேறு
எவ்வரமும் வேண்டேன்யான்

அழைத்துவாச் செய்வீரே—என்மேல்
அன்புவைத்துக் காப்பீரே.

வேறு.

இந்தவரம் பாலன் கேட்டிடவும்—முனிவருமே—மன
திரங்கியவ ரீதுரைப்பார்
சிந்தையினிற் றுயரம்வேண்டாம்—உன்தாய்—
ரேணுகையை—நீபோய்ச் சீக்கிரமா யழைத்துவாடா
என்றுரைத்து ஜமதக்கினி—பிரம்பதனால்—தட்டி
யெழுப்பிவாடா கண்மணியே
என்றுமுனி தானனுப்ப—பரசுராமன்—அடவி
யினைநோக்கி நடந்தனனே
பார்த்தான்தா யுடலைமட்டுஞ்—சிரமதனைக்—காணாமல்
பரிதவித்துக் கலங்கலுற்றான்
வேர்த்தாவி தான்மயங்கி—விதியைநொந்து—நின்று
விம்மிவிம்மி யழுகலுற்றான்
கர்த்தாவே யென்னசெய்வேன்—தலைதனையே—காணேனெனக்
கானிலெங்கும் தேடலுற்றான்

நொண்டிச்சிந்து.

இந்த விதமாயிருக்க—வேறுதலை
எய்திய விதமதை யியம்புகின்றேன்

ஈசனார் வாழ்கைலே—மலையருகே
யிருந்து பெருகிவருங் கங்கையெனும்

நதிக்கரை யோரமதில்—சிற்றூரொன்னு
நகர மதில்வசிக்கும் பறையர்கட்குத்

தலைவனென் பானொருவன்—அனுதினமுந்
தற்பர னடியிணை மறவாதான்

பக்தியிற் சிறந்தவனும்—அடியவர்க்குப்
பணிவிடை செய்வதற்குரியவனும்

அவனொரு தினமதனில்—புலங்களை
யன்புடன் பார்வையிட்டுப் போம்பொழுது

மகேஸ்வரி யம்ஸமதில்—இருந்து
மாயை யெனுமொருபெண் தானுதித்து

அங்கோர் புதரினுள்ளே—கிடந்து
அழுகுரலைக்கேட்டுப் பறையனவன்

சென்றுமே தான்பார்த்தான்—மகவின்
திருவழகதனைக்கண் டுளமகிழ்ந்து

ஈசனே நமக்கிரங்கிக்—குழந்தை
யில்லையென் றுளந்தனில் தானினைந்து

அளித்தனன் நமக்கின்று—எனக்கரத்தா
லணைத்தெடுத் துக்கொண்டு மனையில்வந்து

கொடுத்தனன் மனைவியிடம்—அந்தக்
கோதையும் பர்த்தாவி னடிபணிந்து

வாங்கினள் மகவதனை—மிகு
வாசமலர்ப் பூங்குழலாள் நேசமுடனே

வளர்த்தன ளருமையுடன்—சேயதற்கு
வயதுமே பன்னிரண் டானவுடனே

நடந்திடுஞ் செய்திகளை—அடியேன்
நவின்றிடு வேனதைக் கேட்பீரே.

(சோம சேகரனருளும் என்ற மெட்டு.)

இந்தவித மாய்க்குழந்தை வளருநாளில்—இவ்
வேந்திழையை மணஞ்செய்திட வேண்டுமென்று
அந்தவூரிற் பறையர்களி லொருவனுக்கு—அவ்
வாரணங்கைக் கேட்டுவந்தார் தந்தையிடம்
என்னுடைய மகன்றனக்கு உன்மகளை—மாலையிட
என்னசொல்கி றீயென்றே யுரைத்திடவும்
அன்னவனுங் குழந்தையிடம் நாடிவந்து—நின்று
அற்புதமாய் நான்வளர்த்த பொற்கிளியே
இன்றுநம் குலத்தோருன்னை மணமுடிக்க—எண்ணி
யிசைந்துவந்து கேட்பதினா லேதுசொல்வாய்
என்றுரைக்கத் தந்தையிடம் நங்கையரும்—மன
தேங்கிநின்று ஓர்வசன மியம்பலுற்றாள்.

வேறு.

எனைவளர்த்த என்தகப்பா—உனக்
கிந்தமதி வந்ததென்ன—உன்றன்
மனதினிலே அச்சமற்று—இந்த
மாதினிட முரைக்கலுற்றாய்
வரைதவறி நீநடந்தால்—பிரு
வாதனைக்குள் ளாகிடுவாய்
சண்டாளர் தங்களுக்கு—எனைத்
தான்மணமுடிக்க வென்று
பெண்டாளக் கேட்கவந்த—அந்தப்
பேயர்களுக் கேதுரைப்பேன்
மாபாவி தங்களுக்கு—என்னை
மாலையிட வெண்ணி வந்தாய்
நீபாவி யாவதற்கா—இந்த
நிந்தனையைக் கூறவந்தாய்
தெரியாம லென்னிடத்தில்—இச்
செய்தியைநீ செப்புகிறாய்
குறியாதே மணமதனை—இனிக்
குற்றமது வந்திடுமே

பந்தவினை தானறுக்கும்—அந்தப்
பரஞ்சுடரோன் கிருபையதால்
உன்றனக்கு மகளாக—நான்
உதித்துவந்தேன் பூவுலகில்
அன்பர்மனத் தின்படியே—ஈசன்
அருளளித்த காரணத்தால்
இன்பமுட னுன்றனக்குக்—குழந்தையென
இதுவரையும் வாழ்ந்துவந்தேன்
வந்துதித்த காரணத்தைச்—சற்றும்
மனதினிலே நினையாமல்
இந்தவிதஞ் சொல்லாதே—இனி
யேகிடுவா யெனவுரைக்க.

(மையல்கொண்டு வேலர் என்றமெட்டு.)

இந்தவித மாதுரைக்கத் தந்தையானவன்
சிந்தைதனில் வருத்தமுற்றுத் திரும்பலுற்றனே.
முந்தநின்ற பந்துக்களின் முகத்தைநோக்கியே
சிந்தைநைந்துருகும்படி செப்பலுற்றனே
காவனத் தெடுத்துவந்த கன்னிகைதன்னை
மாமணம்செய்யச்சொன்னதில் மறுத்தாளென்னிடம்
கேவலப்பறையர்க் கென்னைக் கேட்பதழகோ
பாவம் வந்து நேருமென்று பகருகின்றளே
ஆனதினா லென்மேற்குற்றம் யாதுமில்லையே
ஆக்கினைப்படி நடப்பேன் அருள்புரிவீரே
ஈனம்வரச் சொன்னதினல் இழிவுமில்லையே
எனவுரைத்துப் பறையரெல்லா மேகினர்களே.

வேறு.

சென்றுமே பறையரெல்லா மொன்றுசேர்ந்து—அந்தச்
சேயிழையை யென்செய்யலா மென்றங்கோர்ந்து
இன்றுநம் குலத்தவரை யிழிவாகச்—சொல்லி
யேசிடவும் ஞாயமுண்டோ வென்றுபேசி
மாலையிடத் தான்மனமில் லாதுபோனல்—துஷ்ட
மங்கைநம் குலங்குறித்து ஏசலாமோ

சோலைவனந்தனில்முட்புதரினுள்ளே—கிடந்த
தோதகியும் நம்திரத்தை யோசியாமலே

தாய்தகப்பன் ஜாதிபின்ன தெனவறியா—இந்தச்
சண்டாளியைச் சிரங்கொய்யத் தகுதியென்றார்

பாய்ந்திடும் புலிபோல்நின்ற பாதகரிடம்—அந்தப்
பாவைதனைக் கூட்டிப்போய்க் கொன்றிடுமென்றார்

என்றவர்கள் சொன்னவுடன் எக்களிப்பதாய்க்—கொல்ல
எந்தவித மாயுபாயஞ் செய்யலாமென்று

வேறு.

தந்திரமாகக் கொன்றிடவென்று—சில பெண்கள்தனையே
தானுமழைத்து யோசனைசெய்து

எந்தவிதமும் நீங்கள் சென்றுமே—காட்டில்கிடந்த
ஏந்திழையிடந் தான்கலந்துமே

கன்னியவளுக் கிணக்கமாகவே—சில வார்த்தைகள்சொல்லிக்
காவனந்தனைப் பார்க்கலாமெனவே

உன்னியவளைக் கூட்டிவாருங்க—ளெனவே சொல்ல
ஓடினார்வெகு வேகமாகவே

சென்றுமவர்கள் மாவனத்தினில்—கொலை செய்திடச்
சேர்ந்துபுதரில் மறைந்திருந்தனரே

நொண்டிச்சிந்து.

அந்தப்படி யவர்கள்செல்ல—மாயையாய் வந்தி
ஆரணங் கினையழைத்தேயவர்கள்

வனமதனிற்சென்று—அங்குள்ள
வளங்களைக் காட்டியே வருகையினில்

மறைந்திருக் கும்பறையர்கள்—பின்புறஞ்சென்று
மாது சிரத்தைவெட்டித் தள்ளினரே

இருதுண் டாய்விழவே—தலையது
ஏகியா காயமதி லேயிருந்து

சண்டாளப் பறையர்களே—உங்கள்
சாதியெல்லா மாட்டுக்கறி மதுவுண்டுப்

புலையனுப் போகவென்று—சாபங்கொடுத்துப்
போனது வேதலைதான் ரேணுகையின்
பக்கமுட் புதரின்மேற்—கிடக்கவினிப்
பரசுராமன் செய்தியைப் பகருகிறேன்

வேறு.

மங்கையாள் ரேணுகை தன்தலைகாணுமல்
மைந்தனு மேபுலம்பி
எங்கெங்குந் தேடிட அங்கோர் புதரின்மேல்
ஏந்திழையாள் சிரம்போல்
அங்கு கிடந்திடக் கண்டன னப்பொழு
தானந்த மாகவேதான்
பொங்கமுடன்சிரந் தன்னையெடுத்துப்
பொருத்தினனே யுடலில்
தந்தைகொடுத்த பிரம்பதனைக்கொண்டு
தடவிட வக்கணமே
முந்தவுருவினும் அந்தமதிகமாய்
முன்பினில் நின்றவளை
தந்தையி டத்திற்குக் கூட்டிய ழைத்துப்போய்த்
தார்குழ லைநிறுத்தப்
பந்தவி னையினல் வேற்றுரு வானதைப்
பார்த்து முனிவருமே
கற்பழிந்து போனதி னுலனக் கிந்தக்
காரண மானதென்று
சற்குரு வான ஜமதக்கினி முனி
தானும் வருந்தமுற்று
கண்கள் சிவந்திட கனன்று முனிவருங்
கடுவசன முரைப்பார்
மண்புவி தன்னில்நீ நீசம டைந்திட
மலராய னும்விதித்தான்

வேறு.

பார்புகழ் முனியுரைக்கும்—போது
தார்குழலு மெய்மறந்து
சோர்வுமிக வுண்டாகி—பெண்கொடியுந்
துயரமுற் றழுதனளே
பாவியிலும் பாவிஐயோ—என்போற்
பாருலகிற் கண்டதில்லை.

வேறு

முன்னமே யென்னுயிர் போனது போகாமல்
மீளவும் வந்துலகில்
இன்னமுங் கஷ்ட மடைந்திட வென்றனக்
கீசன மைத்தனனே
மண்புவி தன்னிலே என்போலும் பெண்களில்
மாபாவி யாருமில்லை
என்றன்கற் புத்தவ றுற்றதினால் சாபந்
ஏற்பட்ட தேவிதியே.

வேறு.

சலந்திரட்டும் போதினிலே—நான்பாவி ஐயோ—கார்த்த
சாயலது தோன்றிடவும் [வீரியன்
அலமரல்வந் தெய்தியதால்—என்சிந்தைதனக்—கிந்த
அவதிவந்து நேர்ந்ததையோ.

விருத்தம்.

ஐயனே யடியாள் மீது அன்புடன் கிருபை கூர்ந்து
செய்தவென் குற்ற நீக்கிச் சேயிழை யாளைக் காப்பீர்
மெய்தவ வேடம் பூண்ட விமலனே யுமது தாளில்
தையலாள் பணிந்தேன் சாபந் தனைத்தொலைத் தாட்கொள் [வீரே.

வேறு.

அடியவள் செய் குற்றமதை—யென் நாதனே நீர் நீக்கி
யாதரிக்க வேண்டு மையா
கொடியவினை செய்தாலும்—அடிமையின்மேல்—கிருபைசெய்து
குணக்கடலே ஆளு மையா

கோலவிழி நீர்சொரிய—இருகாங்களையும்—அங்கு
கூப்பிநின்று கைதொழுதாள்
சாலவுமே மனமிரங்கி—முனிவருமே—அந்தத்
தார்குழலுக் கேதுரைப்பார்.

கும்மி.

பைங்கொடி ரேணுகா தேவியே நீயிந்தப்
பாருல கிலுள்ளோர் தாம்பணிய
இங்கித மாகமுத் தாலயம் மையென்று
யாவருங் கொண்டாடப் பேர்வாய்ந்து

வருஷ மொருதர மங்கள வாரத்தில்
மானிலத் துள்ள மனுக்க ளெல்லாம்
திருவருள் வேண்டித் துதிப்பவர்க் குப்பல
சித்தி யளித்து நீ காத்திடுவாய்

எந்த நகரிலு முன்றனைக் கொண்டாடி
யிசைந்து திருநாள் நடத்திடுவோர்
அந்த விடங்களில் மாதமும் மாரிபெய்
தானந்த மாகவே வாழ்ந்திருப்பார்

மைந்தனில் லார்க்கு மகவளித்து வரும்
வல்வினை யாவும் விலக்கிவைத்து
இந்த விதமாக நம்பினோர் தங்களுக்
கிகபர சாதன முங்கொடுப்பாய்

இன்னு மொருசெய்தி தானுரைக் கக்கேளாய்
ஏந்திழை யுன்சிர முள்ளதின்மேல்
வந்து விழுந்து கிடந்ததி னற்பெயர்
வாய்ந்ததே முத்தால யம்மையென்று

உன்னுடல் சிரசு மாறினதா லுன்னை
உலகினில் மாரியம் மாளெனவே
நன்னய மாகவே கொண்டாடி னோர்கட்கு
நற்பதவி தந்து காத்திடுவாய்.

என்று முனிவரும் வாக்களித்துநீயும்
ஏகிடு வாயெனத் தானுரைக்க

நின்று பணிந்துமே ரேணுகாதேவியும்
நிமிஷத்திற் சத்தி யுருவாகி

அந்தா துந்துபி தான்முழங் கவுயர்
அமரர்கள் பூமாரி தான்பொழிய
இந்த வுலகத்தோர் கொண்டாட அம்மை
ஈஸ்வரி முத்தாலை யாகினளே.

## மண்டபம் கட்டியவர்கள் பேரில்

### நொண்டிச்சிந்து.

மங்கைமா நகரமென்னும்—வத்திராயிருப்பில்
வாழ்ந்திடுஞ் சைவகுல மரபதனில்

கங்கைதன் குலத்துதித்த—கோதண்ட ராமன்
கருணைக் கிரங்கிக்கட வுளரளித்த

மைந்தனும் பிரமநாயகன்—தமிழில்
வல்லவ னுமிகவு நல்லவனும்

தர்மசிந் தனையுடையான்—அடுத்தோரைத்
தற்காக்கும் யோக்கிய சிலாக்கியனும்

பெருமை மிகவுமுடையான்—சத்யநெறி
பிசகிடான் அரன்பாதம் மறவாதான்

ஆயிரங் கண்ணுடைய—முத்தாலைக்
கழகாய் மணிமண்டப மியற்றவென்று

எண்ணினு னுளமதனில்—அதற்
கிசையவே இந்திரன் மரபில்வந்த

ஈகைநற் குணமுடையாள்—சீனியம்மா
ளியற்றிய நற்றவத்தாற் பெற்றதனயன்

பூங்கா வனமென்னும்—பேருடையான்
பூவுலகிற் கீர்த்திப்பிர தாபமுடையான்

சத்திய நெறிதவறான்—எந்தநேரமுந்
தர்மமே செயமென்னு மெண்ணமுடையான்

சற்சனர்க் குபகாரன்—வழக்கில்
சமர்த்த னெனப்பேர்பெற்ற விவகாரன்

நன்னூ லிலக்கணங்கள்—காரிகை
நாலடி யார்முத லுணர்ந்தவனும்
தேகியென வருபவர்க்கு—மனமது
திருப்தி யெனவளிக்கு நிதியுடையான்
இருவரு மாய்ச்சேர்ந்து—குடிகளிடம்
இனப்படி பணங்களை வசூல்செய்து
ஈஸ்வரி முத்தாலைக்கு—வீற்றிருக்க
இசைய மணிமண்டபம் அமைத்தனரே

(பாளைவாய் என்றமெட்டு.)

ஆதிபரா சத்தியெனும் அம்பிகைமுத் தாலையின்மேல்
அடியேனுஞ்சிந் துக்கவிகள் பாடவே—அம்ப
லத்துவிநா யகனருள் கூடவே
பாதிமதி கொன்றையணி நீதிபரா னீன்றசேயன்
பன்னிருகை வேலன்பதம் போற்றியே—சிந்து
பாடினே னவனருள்கொண் டேற்றியே
ஆதிமறை யாகமாதி யோதிடுஞ் சரஸ்வதியுன்
அடிபணிந்தே னென்றனுவில் வந்துமே—சிந்து
அருள்புரிவா யுன்றனருள் தந்துமே.
எத்தலமுங் கீர்த்திபெற்ற வத்திரா நகர்வளத்தை
யேழைநான் தெரிந்தமட்டுங் கூறுவேன்—கவி
வாணரே பிழைபொறுக்கக் கோருவேன்.

வேறு

(சென்னிகுள நகர் என்றமெட்டு.)

## நகர்வளம்.

என்னிரு கண்மணிமானே—நக
ரின்வளஞ் சொல்லுவேனுனே—இதை
இன்பமாய்க் கேளடி தேனே—இதில்
இதிகாச புராணங்களை அனைவோர்களுந் துதிசெய்துமே
எங்கும் புகழ் தங்கும்.

தென்னைகமுகு பலாவும்—நகர்
சுற்றிலும் நின்று உலாவும்—அதிற்
சென்றுமே மந்திகள் தாவும்—அதன்
சிங்காரம தென்சொல்லுவேன்
மங்கைமட மயிலன்னமே—சீராய்க்—கண்ணுற்பாராய்
அன்னசத்திரத்தைப் பாராய்—அதில்
அதிதிகள் வந்துமே நேராய்—அங்கு
அன்னம் புசிக்கின்றார் சீராய்—தின
மாகரவென முழவோசைகள் திமிதாமென வொலிசெய்திடு
மாரம் வெகுநேரம்.

வேறு.

(மஞ்சுநிகர் என்ற மெட்டு.)

கன்னல்ரச மின்னொளி மானே—நகரின்வள—மிகுசிங்காரங்
காதலியே சொல்லுவேனானே—உயர்
கன்ன லொடுபுன்னை தென்னை மாபலா
உன்ன தத்தொடு நன்ன கர்சுற்றிக்
கவிந்திருக்கும் விந்தையைப்பாராய்
கண்ணாலே நேராய்—அன்னமே வாராய்
கழறுவேனா னின்னமுஞ்சீராய்
சண்பகங்கள் தூரிவாசமே—கமகமெனக்—குமுகுமெனச்
சாந்துபன்னீர் வாடைவீசுமே—யின்னும்
சந்தனத்தொட சோகுவாழைகள் பந்திபந்தியாய் நின்றிலங்
சம்ப்ரமத்தை யென்ற னாவினால் [கிடுஞ்
சொல்லத் தரமோ—என்னால் திரமோ
சாற்றுவேன் மிகவு நானுமே.

வீதிதோறு மாதர்கள்கூடி—சங்கீதம் பாடி—நடனமாடி
விமலையருள் தன்னையேநாடி—உயர்
வித்தகிதிரி சூலிபார்வதி பக்தர்கட்குத வுஞ்சிங் காரி
வேண்டினேன்முத் தாலையுனையே யனுதின்முங் கதியெனவென்
மீதருளை யேபுரி நீயே.

வேறு

கோங்கு கருங்காலி நாங்கிள் வேங்கைமுதல்
கூடாரம் போற்கவிந்து—இருப்பதன்
சீரதைப் பாரடி நீ.
ஆலரசு புளி புங்குமா அத்தியு
மாகாய மீதுவரை—வளர்ந்துமே
வாகா யிருப்பதைப் பார்.
மாதுளை கொய்யா மருதுடன் வேம்புகள்
மாநகர் சுற்றிலுமே—யிருப்பதைத்
தேனேபார் முற்றிலுமே.
இந்திர லோகம்வாழ் ரம்பையர் போற்சில
வேந்திழை யார்கள்கூடி—சங்கீதம்
பாந்தமாய் பாடுறார்பார்.
சல்லாப மாகவே புல்லாங்கு ழலுடன்
சங்கீத வாத்தியங்கள்—முழங்கிடு
மிங்கித மென்சொல்லுவேன்.

வேறு.

மல்லிகை முல்லை ரோஜா மருவுடன் பிச்சிமலர்
மகிழஞ்செண் பகவாசமே—நகரைச்சுற்றி
விகசித பரிமளமே.
மந்தாரை கொன்றைமலர் செந்தாமரைமலரு
மணக்குதே பெருமிதமாய்—குமுதமல
ரிருக்குதே வெகுவிதமாய்.
பாரிசாதஞ்சிவந்தி நேரில்நிறைந்திருக்கும்
பரிமள மென்னசொல்லுவேன்—இன்னமும்பல
மலர்வகை யான் கூறுவேன்.
கோரி துளவம்வில்வம் கொன்றைதும்பைவகுளம்
குண்டுமல்லி சம்பங்கி—விதவிதமாய்
கொடிமல்லி தனைப்பாரீர்க்

4 (டில்லி நகர்தனிலே என்ற மெட்டு)

ஊருக்கு மேல்புறத்தி லுயர்வான தெப்பக்குளம்
பாருக்குள் கண்டதில்லை பைங்கிளியே நாமதிற்போய்
பத்தியுடன் ஸ்நானஞ்செய்து முத்தாலே பதம்
பணிந்திடுவோம் சீக்கிரமாய் வாடி கண்ணே

அன்ன நடையாளே அமுதகுண வாயாளே
வன்னமுள்ள தெப்பக்குளம் வளமதைநானென்னசொல்வேன்
மங்கையரே குயிலே பாரடி நீ
யிங்கிதமா யுரைப்பேன் கேளடி நீ.

அல்லிய சோகு அலரிசெந் தாமரையும்
முல்லை மலர்வாசம் முழங்குமிந்தப் பொய்கையிதில்
மூழ்கினோர் பவவினைகள் தீர்ந்திடுமே
தாழ்வில்லாச் செல்வமது தந்திடுமே

தென்னை கமுகுபலா சிறுநெல்லி சந்தனமும்
உன்னதமாய் வளர்ந்து உலாவிடும் விந்தைதனை
உற்றுமே பாரடிநீ மாமயிலே
முற்றுமு ரைத்திடுவேன் கேள்மயிலே

சித்திர மாயமைந்த சிங்காரப் படித்துறையின்
அற்புதஞ் சொல்லவென்றால் யாராலு முடியாது
அன்ன மேயழ காய்மயி லாடுதுபார்
சொர்னமே சோராய்க் குயில் கூவுதுபார்

தெப்பக்குளந் தனிலே தேவியரே தலைமுழுகிப்
பக்கத்தில் வீற்றிருக்கும் பாண்டிவி நாயகர்தன்
பாதம் பணிந்தால்வினை தீர்ந்திடுமே
தீதில்லாச் செல்வமது தந்திடுமே

அச்சுதா னந்தன் அரிராமர் தன்தூதன்
அனுமந்த ராயன் அடியிணையைப் போற்றிசெய்து
அம்பாள் முத்தாலை பதமே தொழவே
தென்பாய் நடந்துவா நாம்வரம் பெறவே.

## கும்மி.

வருஷமொ ருதரங் கன்னிமார் தந்தனில்
வடக்குவாய்ச் செல்லியம் மாள் தனக்குத்
திருவுடன் பொங்கல் நடக்கும்விந் தைதனைச்
செப்புவேன் கேளடி பெண்மயிலே.

220446.

மங்கையர் ஆலத்தி யேந்திநிற் பார்சில
மாதர்கள் சாமரம் வீசிநிற்பார்
சங்கையில் லாமேள தாளங்கள் ஜொலிக்கும்
சம்ப்ரம மென்சொல்வேன் கண்மணியே.

ஆடம்ப ரத்துடன் பொங்கல்செய் வார்சிலர்
ஆனந்தக் கூத்துக ளாடிடுவார்
கோடிகோடி ஜனம் ஏராள மாய்க்கூடிக்
கும்மி யடிப்பதைப் பாருங்கடி.

காலிற் சதங்கை கலகலென அங்கு
கையில் விசிறி பளபளென
தாள வரிசை தவறு மற்கும்மி
தானடிக் கும்விந்தை யென்னசொல்வேன்.

பச்சரிசி குத்தி மாவாக்கி அதைப்
பாங்குடன் றண்ணீர்விட் டேகரைத்து
உச்சித மாகவே பச்சைக் கலயத்தில்
ஓர்துளி மாவது விட்டிடவும்.

விட்ட வுடனது மேலெழுந்து பொங்கி
மேகந் திரண்டு பொழிவதுபோல்
அஷ்ட திசையுள்ளோர் கொண்டாட மது
அன்புடன் பொங்கி வடிந்திடுமே.

இந்த விதமதுப் பொங்கிட வும்அங்கு
எல்லோருங் கூடி மனமகிழ்ந்து
எந்தாய் வடக்குவாய்ச் செல்லியம் மாள்பாதம்
யேத்திக் கைதொழுது போற்றுவரே.

அன்றே மறுவாரஞ் செவ்வாய்க் கிழமையில்
அம்மன்முத் தாலே திருநாளென்று
நின்றே ஜனங்களெல் லோருங்கை தொழுது
நிச்சயஞ் செய்து குறித்திடுவார்.

சாலி வாகனன் மரபினி லுகித்துச்
சைவ நெறிதவ றுதவர்கள்
வேளாளர்கள் கூடியே அம்ம னுருச்செய்ய
வெள்ளிக் கிழமைச் சுபதினத்தில்.

பச்சைமண் தன்னையே கொண்டுவந் துபய
பக்தி யுடனதைத் தான்பிசைந்து
அச்சுதன் தங்கைமுத் தாலையம் மாளுரு
அமைக்குஞ் சிறப்பைநா னென்னசொல்வேன்.

பஞ்சவர் னப்பல கையெடுத்து அதைப்
பாங்குடன் நீரினாற் சுத்திசெய்து
நஞ்சணிந் தோன்பாதந் தன்னைத் தியானித்து
நாரணி ரூப மமைத்தனரே.

ஆதி பராசத்தி நீதி மகமாயி
அன்பரைக் காக்குந் தயாநிதியாள்
சோதி மயமான தேர்தனி லேறியே
சுத்தரத்ன வூஞ்சல் வீற்றிருந்து.

சத்தி கௌரி மனோன்மணி யாள் அன்பர்
சாபவி மோசனி உத்தமியாள்
நித்ய தயாநிதி அம்பிகை வீதியில்
நேர்மையாய் வாறதைப் பாருங்கடி.

(மஞ்சுநிகர் என்றமெட்டு.)

சற்குண நிறைந்த மாகாளி
கங்காளியே— ஓங்காரியே—உயர்
சத்திகௌ மாரியுமையே—உனைச்
சந்ததம்பணி வோர்க்கருள்தரும்
மந்திரபரி பூரணியுன்மேல்
சாற்றிடுங் கவிக்கிரங்கியே
தயாபரியே—க்ருபாகரியே
சந்ததம் கருணை செய்வாயே.

மந்திர சொரூபி ஸ்ரீங்காரி—பாராபரி—மகேஸ்வரி
மாதவம்பெற் றோர்க்குபகாரி—உனை
மானிலந்தனி லேயுனற்புத தாள்மலர்ப்பத மேதுதிப்பவர்
வல்வினை யகற்றுஞ் சோதியே
கிருபாநிதியே—நீயே கதியே
வாழ்த்தினோர்களைக் காத்திடுந்தாயே.

காரொழுகு கூந்தலிற்சுட்டி
சடைநாகமுஞ்—சந்த்ரப்பிறையுங்
கதிரொளிகள் போல மின்னவும்—உயர்
கனகமயநவ ரத்னச்சிமிக்கியுங்
கழுத்தில் ஜொலித்திடு முத்தாபரணமுங்
கருணைவிழிப் பார்வையழகுங்
கலகலெனச்—சலசலெனக்
காலிற்சதங் கைகுலுங்கவும்.

நாகரத்னத் தாழ்வடங்களும்
மூக்குத்தளுக்கும்—நத்துப்புல்லாக்கும்
நயனவிழிப் பார்வையழகும்—நிதம்
நத்தியுனதடி பற்றினவர்க்கருள்
சித்தமகிழ்ந்துமே முத்தியளித்திடும்
நடனசிங்க வாகனரூபி
துரந்தரி—நிரந்தரி
நாதகீத வேதாந்தரூபி.

அரையிலொட்டி யாணமிலங்க
இருகையிலும்—பளபளென
ஆணிமுத்து வளையல்துலங்க—நல்ல
அழகாய் விரல்தனில் வயிரமோதிரம்
அருக்க னொளிபோல ஜொலித்தி லங்கிடும்
அற்புதத்தைப் பாரடிமாதே
அடியேகோதை—நளினமாதே
அன்பினிலு யர்ந்தபூமாதே.

வேறு.

(என்றனுட திருநாடு என்ற மெட்டு.)

பொற்கொடியே மங்கைநகர்ப்
புரட்டாசித்தே ரோட்டம்—அந்தப்
புதுமைவெகு கூட்டம்—அடி
பூவையேநாம் அவளுடன் போவோம்வெகு நாட்டம்
அமரர்சித்தர் யோகர்களும்
அருகிருந்து துதிப்பார்

அரம்பையர்கள் நடிப்பார்
அம்பிகைமுத் தாலேபுகழ் அனுதினமும் படிப்பார்.

விப்ரகுல சிரேஷ்டரெல்லாம்
வேதமோதி வருவார்—ரத
மீதினிலே றிடுவாள்—அந்த
வேடிக்கையைப் பார்க்கவெகு ஜனங்களோடி வருவார்.

அற்புதமாய்க் கண்காக்ஷி யநேகவித முண்டு—அந்த
ஆனந்தத்தைக்கண்டு—அங்கு
ஆயிழையா ரெல்லோரு மாவலது கொண்டு.
எத்தனையோ மாவிளக்கு
எடுத்துவரு வாருங்—துதி
படித்துவரு வாரும்—பல
ஏந்திழையார் குரவைசெய்து சூழ்ந்துவரு வாரும்.

கயிறுகுத்தும் வேடிக்கைகண்
காக்ஷிமெத்த வுண்டு—அந்த
மாக்ஷிமையைக் கண்டு
காதலிமா ரெல்லோருங் களிப்புமிகக் கொள்வார்.

(தெள்ளுதமிழுக்குதவு என்றமெட்டு.)

அன்னமே பசுங்கிளியே பாரு—இதோ
ஆதிபரை வீற்றிருக்குஞ் சீரு—தினம்
அண்டர்முனி வோர்முதலாய்
எண்டிசையுள் ளோர்துதிக்கு
மாதி—பரஞ்சோதி.

கங்கையணி செஞ்சடையோன் மீது—இவள்
காதல்கொண்டு சென்றமடமாது—தினங்
கண்டுதரிசிப்பவர்க்குப் பண்டுள்ள வினையைநீக்கிக்
காப்பாள்—துயர் தீர்ப்பாள்

நம்பினோ ருளத்தில்மேவு நேமி—நிதம்
நாவலர் துதிக்குஞ்சிவ காமி—நின்று
நாடிவரங் கேட்பவர்க்குத் தேடியேவ ரமளிக்கு
நாரி—யுபகாரி.

சித்தர் முத்தர் பத்தர்களுங் கூடி—அம்பாள்
சேயிழைமுத் தாலைபதம் பாடி—அவர்
இத்தகிடத்தோமெனவே நிர்த்தனஞ்செய் திடும்விந்தை
சீராய்க் கண்ணால் பாராய்.

வேறு

ஆத்திரமதாகவோடி நேர்த்திக்கடன் தான்முடிக்க
அன்னமே வருவார் சிலபோடி—அதை
யென்னவென் றெடுத்துரைப்பேன் சீரடி.

அக்கினிச்சட் டியைக்கையில் முக்கியம தாயெடுத்து
ஆனந்தங்கொண் டாடிவருவாரடி—அதைத்
தேன்மொழியே சொல்லத்தர மாமோடி.

சங்கீதராகத்துடனே மங்கையர்மாவிளக்கேந்திப்
பொங்கமுடன் வருமார வாரமே—திக்
கெங்குமுளோர் கேட்பரந்த நேரமே.

சோதிமய மாய்விளங்குஞ் சொர்ணமணி மண்டபத்தில்
ஆதிபரை வீற்றிருக்கும் நேர்த்தியைக்—கண்டு
ஆவலுடன் கைதொழுவார் போற்றியே.

சிந்தைதனி லேநினைந்து சந்ததிகள் வேண்டுமென்று
சேயிழைமா தர்கள்சிலர் கூடியே—நின்று
ஆயிழைமுத் தாலைபதம் பாடியே.

பத்திபத்தி யாகநின்று உத்தம தயாபரியாள்
பாததரி சனஞ்செய்வார் கூடியே—தேங்காய்
நீதமுட னுடைபடுங் கோடியே.

சந்திர சடாதரியாள் மந்த்ரபரி பூரணியாள்
சர்வமு நிறைந்தமய ஜோதியாள்—தினம்
பரிவுட னருளளிக்கு நீதியாள்.

(திருக்கடையூர்தனிலே என்ற மெட்டு.)

பாததரிசனமே—கண்டவுடன்
பார்க்கப்ர மானந்தமே
பக்தியுட னுன்னை நித்தந் துதிப்போர்க்குப்
பாவ விமோசனமே.

ஆதிபராபரையே—முத்தாலை
யம்பிகை யேஉமையே

நீதியு டன்பணிந்தோர்—வினைகளை
நீக்கிரட் சிப்பாயே.

மங்கள மானரூபி—துரந்தரி
யெங்குநி றைந்தசோதி
சிங்கவா கனமீது—அமைந்திடும்
தேவியெஞ் ஞானரூபி.

எத்தல மும்புகழுங்—கீர்த்தியுயர்
வத்ரா நகர்வாழும்
வெற்றி யுடையவளே—முத்தாலையுன்
சித்தம கிழ்ந்தருள்வாய்.

சங்கரன் றன்னுடனே—வாதாடிச்
சபையில் நடித்தவளே
சங்கரி சாம்பவி சடாக்ஷரி யேழைநான்
சாற்றினே னுன்புகழை.

அம்மைப் பிணிமுதலாய்—வருத்திடும்
அல்லல் தவிர்ப்பவளே
செம்மையா யுன்றனடி—பணிவோர்க்குச்
சேமந் தருபவளே.

கல்விப் பொருளறியாச்—சிறுவனுங்
கற்றறிந் தோர்கள்முன்னே
செல்லியு னைப்பணிந்து—சிந்துகும்மி
செய்தாங் கேற்றினனே.

கும்மி.

இந்த விதமாகச் செல்லி முத்தாலை
யிருவர் திருநாளின் காட்சி தன்னை
யிந்திரன் றன்னிடந் தேவர் முனிவோர்கள்
எல்லோருங் கூடி யுரைத்தனரே.

என்றுரைக் கத்தேவ ராஜன் மனமகிழ்ந்
தேதுரைப் பான்சப்த மேகங்கட்குஞ்
சென்றுமங் கைநக ரூர்தனி லேமாரி
சிறப்பா கப்பெய்யு மென்றுரைத்தான்.

அந்த வுரைகேட்டு ஏழுமே கங்களும்
அப்பொழு தேகடல் நீர்வாங்கிச்
சுந்தர மான சதுர கிரிமுதல்
தோப்பு மலைவரை காலூன்றி.

மின்னல் குமிறி யிடிமுழக் கத்துடன்
மிகுதிய தாகவா னஞ்சொரிய
கன்னிமங் கைநக ருள்ளகண் மாயெல்லாம்
கங்கைபெ ருகத்த ழைத்தனவே.

கன்னல் கதலி கரும்புடன் தெங்குகள்
காவுக ளெல்லாஞ்செ ழித்தோங்கி
உன்னத மாகப் பிரசைக ளெல்லோரும்
உள்ள மகிழ்ந்து களித்திருந்தார்.

வாழி.

ஆதி பரனுமை யீன்றெடுத்த பாலன்
அம்பல விநாயகன் றாள்வாழி
ஓதிட வாக்கினில் வந்தருள் செய்கின்ற
உத்தமி சரஸ்வதி தாள்வாழி.

புள்ளிம யிலேறி வள்ளித னைமணம்
புரிந்தகு கன்பதந் தான்வாழி
தெள்ளிமை யாகவே யோகிவைத் தகுரு
செய்ய திருமலர்த் தாள்வாழி.

சத்தரி ஷிமுதல் நித்தந்த வம்புரி
சதுரகி ரிவரை தான்வாழி
கர்த்தன்ம காலிங்க சுந்தரே சர்பதந்
கனிந்து மிகவும் வாழியதே.

ஆதிப ராபரை நீதிம கமாயி
அம்பிகை முத்தாலே தாள்வாழி
சோதிவ டக்குவாய்ச் செல்வியம் மாள்பதம்
துதித்துத் தினமும் வாழியதே.

எங்கும் புகழ்பெற்ற மங்கை நகருள்ள
எல்லா மனுக்களுந் தாம்வாழி
பொங்க முடனே பொருள்கொடுத் தச்சிட்ட
புண்ணிய வான்களுந் தாம்வாழி.

முற்றிற்று.

2.20446.
93
6-43